285

ஓம்.

தத். ஸத்.

# விலக்ஷணானந்தர்

1917-ஞு மே-மீ 8-உ மாலை

ஈரோடு ரயில்வே ஸ்டேஷனில்

உபந்நியாஸம் செய்த

# பிரஹ்மோ உபந்நியாசம்.

இஃது

பவானி

ஆர். வி. சங்கமேஸ்வரனால்

ஸ்ரீ கிருஷ்ண பிரஸில்

...டிக்கப்பட்டது.

1926.

Q2
N26
175522

ROYAL

401
181.48

ஓம்.

தத். ஸத்

---

ஹே ஆத்மர்களே! இன்று மாலை ரயில்வே பிளாட்பாரத்தில் நின்றுகொண்டு 20 நிமிஷநேரம் யதார்த்த ஞான விஷயங்களைச் சுருக்கமாக உங்களுக்கும் போதிக்க ஆரம்பித்திருக்கிறேன். இதுஇனிதுமுடியுமாறு அகண்டாகார ஆனந்த சொரூபசைதன்ய வஸ்துவை இப்போதுதான் நினைத்தேன் என்று எண்ணாதீர்கள். எப்போதும் நாம் அதுவாகவும், அது நாமாகவும் இருக்கிறோம் அப்படியிருந்தும் நாம் நம்மை ஓர் ஜீவனாகவும் ஓர் மனுஷனாகவும் ஓர் சாதிக்குளகப்பட்டவனாகவும் ஓர் வருணத்தனாகவும் ஓர் ஆச்சிரமியாகவும் நினைத்து, நம்முடையயதார்த்த சொரூபத்தை மறந்து ஜன்மப்படுகுழியிலாழ்கிறோம். அப்படி நினைப்பதும் ஜன்மவிருத்திக்கு ஓர்விதநன்மைதான். அதுஉண்மை ஞானத்துக்கு நேர்விரோதமாயிருக்கிறது. எப்படியெனில், சர்வதத்துவங்களையுங் கடந்த இடத்தில் பிரஹ்ம தரிசனமுண்டாகிறது. அதாவது, அத்வைதிகள் கூறு

17592

கிறபடி இருபத்தெட்டாவது தத்துவமும், விசிட்டாத்துவைதிகள் கூறும் இருபத்துநாலாவது தத்துவமும், சாங்கியர்கள் கூறும் இருபத்தைந்தாவது தத்துவமும் கடவுளென்கிறார்கள். யார் எப்படி தத்துவக் கணக்கு சொன்னபோதிலும் எப்படியாவது தத்துவங்களைக் கடந்தேதீரவேண்டும். அப்படி தத்துவங்களை கடக்க வேண்டுமானால் ஸ்தூல சரீரத்துளாரோபிதமான வருணாச் சிரமங்கள், அவற்றின் பிரிவுகள் அவற்றின் கட்டுப்பாடுகள், இவைகளில் மனம்வைக்காமல் அப்பாலுள்ள தத்துவங்களைத் தள்ளி அப்பாற்செல்லவேண்டும். அதன்விவரங்களை விவரிக்க இப்பொழுது சமயமில்லாததனால் இன்னொருதரம் வரும்போது சொல்லுகிறேன். பின்னும் வருணாச்சிரமதருமங்கள் எதுவரை அனுஷ்டிக்கவேண்டுமென்றாலோ, உண்மை ஞானம் வரும் வரையிலும், துரியானுபவம் வரும் வரையும், அல்லது, உலகத்துள்ள ஓர் மதம், ஓர் சாதி, ஓரரசன், ஓர் வீடு, ஓர் செல்வம், இன்னுமனேகமாயுள்ள சர்வ பந்தங்களையுங்கடக்கும் வரையும், அல்லது சர்வ இச்சைகளும் விடும் வரையிலும், தன்னுடைய யதார்த்த

நிலை தெரியும்வரையும், எங்கும் ஒரே சம்பாவனை வரும் வரையும், இருதயத்திலுள்ள துக்கம் நீங்கும் வரையும், அதாவது, இருதயம் சுத்தமாகும் வரையும் அனுஷ்டிக்கவேண்டும். அப்பாலுமனுஷ்டிக்கக்கூடாது. ஏனெனில், அவனுக்குண்டான ஞானத்தையுங் கெடுத்துவிடும். அது எப்படிக்கெடுக்குமென்றால், ஒருவன் ஓர் பாழ்ங்கிணற்றில் வீழ்ந்துவிட்டான். அவன் ஓர் வேரைப்பற்றிக்கொண்டு நிற்கிறான். அப்போது வேறோர் மனிதன் கிணற்றின்மேலிருந்து ஓர் பலமான கயிற்றை விடுகிறான். இக்கயிறு வருகிறதைக் கண்டு மேலேறவேண்டுமென்னும் ஆத்திரத்தினால் வேரைவிட்டுவிடுவாயினாயின் கிணற்றில் வீழ்ந்து விடுவான். பின் அவன் என்னசெய்யவேண்டுமென்றால் கயிறு தன்னிடம் வரும் வரை வேரைப் பலமாகப் பிடித்திருந்து கயிறு வந்தவுடன் கயிற்றை ஓர் கையினாற் பலமாகப்பிடித்துக்கொண்டபின் வேரை விட வேண்டும். அப்போது மேலிருப்பவன் கயிற்றை மேலிழுக்க இவன் மேல்வந்துவிடுவான். இதல்லா

மல் இவன் கிணற்றுக்குள்ளிருக்கும் வேரை ஒரு கையிலும், கயிற்றை ஒரு கையிலும் பிடித்துக்கொண்டிருந்தால் மேலும் வரமாட்டான் கீழும் போகமாட்டான், நடுவிலே தயங்குவன், ஆதலால் கயிறு கிடைத்தவுடன் வேரை விட்டுவிடவேண்டும். இதுபோலத் தாஷ்டாந்தத்தில் ஜன்மமென்னுங்குழியிலொருவன் விழுந்துவிட்டான். அவன் வருணாச்சிரமதருமமென்னும் வேரைப்பிடித்துக்கொண்டு தொங்குகிறான். அப்போது குருவென்னுமொருவர் ஞானமென்னுங்கயிற்றை உள்ளே விடுகிறார். அது வருகிறதென்னும் ஆத்திரத்தினால் வருணாச்சிரமதருமமென்னும் வேரை விடுவானாயின் ஜன்மக் குழியில் விழுந்துவிடுவான். ஆதலால், ஞானமென்னுங் கயிறு வந்தவுடன் பலமாகப் பிடித்துக்கொண்டு பின் வருணாச்சிரமவேரை விடவேண்டும். ஞானம் வந்தும் வருணாச்சிரம பந்தமிருக்குமானால் அவன் ஒரு நாளுங் கிணற்றிலிருந்து மேலேறப்போகிறதில்லை. இது சுருதி யுக்தி அனுபவம் என்னும் மூன்றிற்குஞ் சம்மதமாம். மோட்டார்வண்டி ஏறுவதற்குப் பண

மிருக்க என் கட்டை வண்டியேறவேணும். அது
போல், ஆத்ம ஞானமடையச் சாமர்த்தியமிருக்க
என் வருணாச்சிரம தர்மமனுஷ்டிக்கவேண்டும்.
அப்படி மோட்டார் வண்டியில் போகிற ஒருவனை
கட்டை வண்டியில் போகிற ஒருவன் என் நீ மோட்
டாரில் போகிறாய்; என்னோடு கட்டை வண்டியில்
நான் வரவேண்டுமென்றால் அதற்கு என்ன பதில்
சொல்லலாம். அதுபோல் ஆத்ம ஞானம் என்
னும் மோட்டார் வண்டியிற் போகிற ஒரு
வனை வருணாச்சிரம கட்டை வண்டிக்காரன்
என்னுடைய வண்டிக்கு வாவென்றால் நாமதற்கு
என்ன செய்யலாம். அவனுக்கு மோட்டாருக்குப்
பணமில்லை, அதனால் பணமிருக்கிறவனையுங் கூப்பிட
லாமா? கூப்பிடுதல் அவனுடைய புத்தி ஈனமும்
வினயசம்பத்துமில்லாததனால். ஆனால் அவன் கூப்
பிடலாம் கூப்பிட்டபின் இவன் என்னிடம் பண
மிருக்கிறது எனக்கது தேவையல்லவென்றால் அதை
யாவது கேட்கவேண்டாமா? பின்னும் இதைப்
பற்றியே அதி விரைவாகவும், சுருக்கமாகவும், தெளி

வாகவும் சொல்லுகிறேன். வருணாச்சிரம தருமம் இன்னுமெதுவரை வேண்டுமெனிலோ அதையும் சொல்லுகிறேன். ஓர் பாதையில் ஓர் மாஞ்செடி வைத்திருக்கிறது அது சிறியதாயிருப்பதால் ஆடு மாடுகள் மேய்ந்து கெடுத்துவிடுமென்று மதில் வைக்கிற வழக்கம். அந்த மதில் எதுவரை வேண்டும். மரம் பெரிதாகும் வரையே, அப்பால் வேண்டிய தில்லை, அதுபோல் ஞானமென்னுமோர் மாஞ்செடி வைத்திருக்கிறது. அதை உலக பாசங்களான மண், பெண், பொன் முதலிய எடணாத்திரயங்களென்னும் ஆடுமாடு மேய்ந்து கெடுத்துவிடாதபடி வருணாச்சிரம தருமமென்னும் மதில் வைக்கவேண்டும். ஞான மாஞ்செடி பெரிதான பின் வேண்டுமோ? வேண்டாம். பின் ஞானம் வர ஆரம்பிக்கும்போது கரும காண்டத்தை அனுஷ்டித்தல் கூடாது. ஏனெனில் இருக்கும் ஞானத்தையுங் கெடுத்துவிடும். எப்படியெனில், ஞானமோ, அந்தர்முகவேலை. கர்மமோ பகிர்முகவேலை, ஞானமோ, அபேதம், கர்மமோ, பேதம். ஞானமோ, சுகம். கர்மமோ, துக்கம். ஞா

னமோ, அகண்டம். கர்மமோ, கண்டம். ஞானமோ முடிவு. கர்மமோ, ஆரம்பம். இன்னும் இதுபோன்ற விஷயங்களிலும் ஞானமே பிரபல சுருதிகளில் மேலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது என்னுடைய அபிப்பிராயமல்ல. வியாச பகவான் கூறிய பிரஸ்தானத்திரயத்துள் ஒன்றான பிரஹ்ம சூத்ரம் நான்காம் அத்தியாயத்திலும், ஸ்ரீ பகவத் கீதையில் பகவானாலும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. கீதையில்:—

உய்வகையோசமொருப்படுவார்க்கது
கைவருமாசெயல்காரணமேகாண்
மெய்வகையோகம்விளைந்தபின்மெய்யே
செய்வனவானவைதீமையவேயாம்

பின்னும் பற்பல ஆசாரியர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றை இங்கு கூறச் சாவகாசமில்லை. பின்னும் வாயினால் ரொம்ப சாமர்த்தியமாகவும், சர்வ சாஸ்திர சம்பன்னனாகவும் பேசிவிட்டால் ஞானமா? அப்படி சாஸ்திரம் படித்ததெல்லாம் இப்போது எனக்கு விரோதமாகத் தெரிகிறது. ஏனெனில், எனக்குச் சாஸ்திரம் தெரியாமற்போனால்

ஒருவருடனும் பேசாமல் மனனத்ச் சமாதியிலேயிருந்துவேன். சாஸ்திரந் தெரிந்ததினால்தானே பேசவேண்டி வந்தது. ஆனாலும் உலக உபகாரந்தானே. ஞானிகளில் மூன்றுவிதம். அதாவது, உத்தம, மத்திம, அதமமென்னும் மூன்றுவிதப் பிராரத்தமுடைய ஞானிகள். எப்போதுஞ் சமாதியில் இருக்கும் முயற்சியிலேயிருப்பவன் உத்தமன். சமாதி முயற்சியும் உலக உபகாரமுமாயிருப்பவன் மத்திமன். வியாபாரம், இராஜ்யபரிபாலனம், கிருஷி முதலிய காரியங்களைச் செய்பவன் அதமன். அதாவது சுகர், தத்தாத்திரேயர், உத்தவர், இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் முதலியவர்கள் உத்தமர்கள். வசிஷ்டர், வியாசர், உத்தாலகர், யாக்ஞவல்கியர், பராசரர், நாரதர், விவேகானந்தர் முதலியவர்கள் மத்திமர்கள், ஜனகராசா, கிருஷ்ணன், இராமன், இட்சுவாகு, பகிரதன், அருச்சுனன் முதலியவர்கள் அதமர்கள். ஆனால் எல்லோருக்கும் முக்தி சமமே. ஆத்ம சுகம் மாத்திரம் ஏற்றக்குறைச்சலாக இருக்கும். பின்னும் வருணாச்சிரம தருமங்கள் சித்தசுத்திக் கேது

வென்று சொல்லலாம். அதாவது I. C. S. பாஸ் பண்ணினவன்தான் கலெக்டர் வேலைக்குப்போகலாம் B.A.B.L. பாஸ் பண்ணினவன்தான் ஐக்கோர்ட்டு வக்கீல் வேலைக்குப் போகலாமென்பது போலவும், ஞான அதிகார லக்ஷணங்கள் கூறியபடியுள்ளவனே ஞானத்துக்கு போகலாமென்று சொல்லலாம். வருணாச்சிரம வேதமிருக்கும்வரை ஒருவருக்கும் ஞானமுண்டாகிறதில்லை. ஞானமுண்டாகாமல் வருணாச்சிரம பேதமும் போகிறதில்லை. அது எதுபோலெனில், திருச்சினாப்பள்ளிக்கு மெட்ருஸ் மெயில் வரவும் ஈரோடு மெயில் போய்ச்சேரவும் சரியாயிருக்கிறது. அதுபோல ஞானம் வரவும், வருணாச்சிரம பேதம் போகவும் சரியாயிருக்கிறது. ஆஸ்ரமங்களாலும், வருணங்களாலும் ஞானமுண்டாகிறதில்லை. அப்படி இருக்குமானால் எல்லா வருணத்தார்களுக்கும் ஞானமுண்டாகவில்லையே. அதனால் சந்நியாசம் செய்துகொள்ளவேண்டும். அதனால் ஞானம் வருமென்று சொல்லுகிறார்கள். சந்நியாசமென்றால் தலைமொட்டையடித்துக் காவிபூண்டு ருத்ராக்ஷதாரணஞ்

செய்து புறப்படுவதல்ல. மனதினின்று சர்வ இச்சைகளையும் விட்டு நிருவாணியாயிருத்தலாம். ஆதலால் அதுவே ஞானத்துக்கு நேர்சாதனமாம். ஞானமில்லாத மனிதர்கள் உலகத்தில் ஒருவருங் கிடையாது. ஆத்ம ஞானமென்றால், கோவிலுக்குப்போய் வருதல், புஷ்பங்தொடுத்து விக்கிரகங்களுக்குச் சாத்துதல், தீர்த்தயாத்திரை செய்தல் முதலியன அல்ல. பின்னே, மனதை ஆத்மாவினிடத்தே இருக்கச் செய்வதேயாம். ஆசையை விடாமல் ஒருவரும் ஞானமடையமுடியாது. ஆசையுடன் ஞானமடையலாமென்று சிலர் சொல்லுவார்கள். அவர்கள் கூறுகிறபடி அடையலாம், எப்படியென்றால், இரண்டு எவ்வன ஸ்திரீகள்கூடி புத்திரனுண்டாகுமானால் ஆசையோடு ஞானமுமுண்டாம். ஆதலால் ஆசையுள்ளவனுக்கு ஞானமுண்டாகிறதில்லை. ஞானமுள்ளவனுக்கும் ஆசையுண்டாகிறதில்லை. எப்படியெனில், அரையணுவுக்கு வாங்குகிற புளித்தமாம்பழந்தின்ற ஒருவன் அதையே பெரிதாக நினைக்கிறான். அவன் சேலம் இரண்டணு மாம்பழந் தின்றபின்

அரையணு பழத்திலிச்சை வருகிறதேயில்லை. அது போல் ஸ்திரீகள் செல்வம் முதலிய அரையணு மாம் பழச் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிற நாம் ஆத்ம ஞானமென்னும் இரண்டணு மாம்பழஞ் சாப் பிடும்வரை அரையணு மாம்பழமான ஸ்திரீ முத லான இச்சை விடுகிறதில்லை. பின்னும் லண்டன் மாநகரிலிருக்கக்கூடிய 250 கோடி ரூபாய் ஸ்திதி யுள்ள ஒரு துரை ஈரோடு நீசப்பெண்ணை விவாகஞ் செய்வானு? செய்கிறதில்லை. ஏனெனில், ஜப்பான், ஜர்மனி, பிராஞ்சு, அமெரிக்கா, இட்டாலி, டர்க்கி, சைனு, பாம்பே, மெட்ருஸ் முதலிய இடங்களி லுள்ள அழகான ஸ்திரீகளையெல்லாம் விட்டுப் பட்டிக்காடான ஈரோட்டில் அதிலும் அழகில் லாத எழைவீட்டு நீசப்பெண்ணை விவாகஞ் செய் கிறதில்லை. அப்படி விவாகஞ் செய்வானேயானுல் அவன் லார்டுதுரையுமல்ல. அதுபோல அநித்தியஜட துக்கமலபாண்டமான ஸ்திரீகளை ஆத்மஞானிகளிச் சிக்கிறதில்லை. இச்சித்தாலாத்ம ஞானியுமல்ல. பின் னும் இல்லற ஞானிகள் வருணுச்சிரம தருமங்களை

விடாமலனுஷ்டித்தார்களே என்ற சங்கை உங்களுக்குண்டாகலாம். அவர்களுக்கு மனதில் வருணாச்சிரம பேதங்களில்லை. ஆனால் அவர்கள் பிராரத்தம் அவர்களை இல்லறத்திலிருக்கும்படிச் செய்கிறது. ஆனாலும் அவர்கள் மூடத்தன்மையான உலக மனுஷ்யர்களுக்காகத் தானும் வருணாச்சிரம தர்மங்களை அனுஷ்டிக்கிறதாக நமக்குத் தெரிகிறது. அது அவர்களிடத்திலில்லை. எப்படியிருந்தாலும் துறவற ஞானியே பெரிதென்று நான் சொல்வேன். ஏனென்றால் இரண்டு எவ்வன புருஷர்கள் இரண்டு எவ்வன ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டு வந்து இரண்டு ஏழாவது மாடிவீட்டில் வைத்தார்கள். ஒருவன் ஏழாவது மாடியில் மனைவியோடு சுகித்துக் கொண்டிருக்கிறான். ஒருவன் கீழ்மாடியில் குடும்ப விவகாரம் பண்ணுகிறான். ஆருக்கு பெண்சுகமதிகம் கிடைக்கும். மேல்மாடியிலிருந்தவனுக்கேதான். கீழ்மாடியிலிருந்தவனுக்கு மனைவியின் சுகங் கிடைக்கிறதில்லை. ஆனால் மனைவியென்கிறபாத்தியம் இரண்டு பேருக்கும் ஒன்றுதான். இதுபோல, இரண்டு அப்

யோகிகள் ஞானமென்னும் ஸ்திரீயை விவாகம்
பண்ணிவந்து சுயேச்சை, விசாரணை, தனுமானசி, சத்
துவாபத்தி, அசமசத்தி, பதார்த்தபாவனை, துரியம்,
என்ற ஏழுமாடி வீடுகட்டி அதில் வைத்தார்கள்.
ஒருவன் ஏழாவது மாடியில் ஞானப்பெண்ணுடன்
சுகிக்கிறான். மற்றொருவன் சாக்கிராவஸ்தை என்
னுங் கீழ்மாடியில் குடும்ப வேலை பார்க்கிறான். ஆரு
க்கு ஞானச்சுகமதிகங்கிடைக்கும் மாடிவீட்டிலுள்ள
வனுக்கே. கீழ் வீட்டிலுள்ளவனுக்கு ஞானச் சுகங்
கிடைக்கிறதில்லை. ஆனால்ஞானமாத்திரமிருவருக்குஞ்
சமம். இதில் மாடிமேலிருந்து சுகிக்கிறவன் துறவற
ஞானி. கீழ்மாடியிலிருக்கிறவன் இல்லறஞானி. இக்
காரணங்கொண்டே துறவறஞானி பெரிதென்று
சொன்னோம். நான் உங்களுக்கு எவ்வளவு ஞானம்
சொன்னாலும் இப்போதானிருக்கும் பின் போய்விடும்
எப்படி என்றால் ஓர் பாசி நிறைந்த குளத்தில் கல்லைப்
போட்டால் பாசம் விலகும் கல் உள்ளே போனபின்
பாசம் மூடிக்கொள்ளும். அதுபோல மனதென்னு
முங்கள் குளத்தில் அஞ்ஞானமென்னும் பாசமூடி

175522

யிருக்கிறது. அதில் நான் ஞானவார்த்தைகளென்ற கல்லைப்போடுகிறேன். இவ்வார்த்தை என்னுங் கல் உள்ளே போன பின் உங்கள் மனமென்னும் ஜலத்தை அஞ்ஞான பாசமூடிக்கொள்ளும். ஆனால் அக்குளத்தில் குளிதாமரையைப் போட்டுவிட்டால் சிறிதுதினங்களில் பாசியை தின்றுவிடும். இதுபோல நீங்களும் உங்கள் மனமென்னும் ஜலத்தின்மீது ஞானமென்னுங் குளிதாமரையை போட்டுவிடுங்கள். அது சிறிதுகாலத்தில் அஞ்ஞான பாசத்தை தின்றுவிடும். பின், சர்வசாஸ்திரங்கள் படித்ததனால் ஞானமுண்டாகுமோ? என்று ஒருவர் கேட்ட சங்கைக்குச் சமாதானஞ் சொல்லுகிறேன். ஒருவனுக்கு லண்டன் போகவேண்டுமென்ற ஆவல்கொண்டு பிளான்படிக்கிறான். அதனால் லண்டன் போனதாக ஆகுமா; ஆகிறதில்லை. பின் அவன் லண்டன் போகவேணுமானால் அதிகமாக திரவியம் வேண்டுமாதலால் மூன்று ரெயில் சந்திக்கிற இடங்களில் காப்பி ஹோட்டல் வைத்துப் பணம் சம்பாதித்துக் கொண்டு ரெயிலேறிச் சென்னைபோய் அங்குள்ள

சென்ட்ரல் ஸ்டேஷனில் ரெயிலேறி பம்பாய்சென்று அங்கிருக்கும் ஹார்பர்போய் அங்குள்ள ஸ்டீமரேறி லண்டன் போகவேணும். அதுபோல முக்தியென்ற லண்டனுக்கு போகவேண்டுமானல் ஞான வாசிஷ்டம், பிரஹ்மசூத்ரம், பகவற்கீதை, கடம், முண்டகம், மாண்டுக்யம், தைத்திரியம், பிரகதாரண்யம், சுவேதாஸ்வரம், சாந்தோக்யம், ஜாபாலம், கைவல்யம், முதலிய உபநிஷத்துக்கள்; ஈஸ்வா கீதை, பிரமகீதை, உத்தரகீதை, சங்கரகீதை, குருகீதை, சூதகீதை, இராமகீதை, ரிபுகீதை, சிவகீதை, முதலிய 18 கீதைகளும், இன்னும் மற்றுள்ள பற்பல பிரபல சாஸ்திரங்களை படித்தால் போதாது. இவைகளெல்லாம் முக்தியென்னும் லண்டனுக்குப் பிளான்களாம். இந்தப் பிளான்களான சாஸ்திரங்களை நன்றாய்ப் படித்ததினல் முக்திக்குப் போனதாக ஆகிறதில்லை. ஆதலால், முன்சொன்ன லண்டனுக்குப்போக பணம் சேர்த்ததுபோல முக்தி என்னும் லண்டனுக்குப் போக ஏகாக்கிரம் என்ற பணம் சேர்க்கவேண்டும். அதற்குச் சாத்துவீகம், இராஜசம், தாமதம், என்

னும் மூன்று ரெயில் சந்திக்கிற சுழுமுனைபிரமரந்திரம், சூனியாகாசம், முதலிய ஜங்ஷன்களில் பிராக்டீஸ் என்ற காப்பி ஹோட்டல் வைத்து ஏகாக்கிரம் என்ற பணம் சேர்க்கவேண்டும். பின் பிளான் பார்த்த இடம் அஞ்ஞானம் குதிரைவண்டி யேறுதல் சகாமகர்மம். ஸ்டேஷனில் வந்து இறங்குவது நிஷ்காமகர்மம். ரெயில்வே ஸ்டேஷன் சித்தசுத்தி ஸ்டேஷன் மாஸ்டர் குரு. அவர் கொடுத்த டிக்கெட் உபதேசம். நாம் கொடுத்த பணம் ஏகாக்கிரம். ரெயிலேறுதல் சமாதி பழகுதல். திருச்சினாப்பள்ளி சவிகற்பசமாதி. மெட்ராஸ் நிருவிகற்ப சமாதி. சென்ட்ரல் ஸ்டேஷன் கனவிற்சுழுத்தி, அதாவது, தூங்காமற்றூங்குதல். பம்பாய் சகசநிஷ்டை. லண்டன் முக்தி. இப்படி முக்தியை யடையவேண்டும். சாஸ்திரத்துக்கும் முக்திக்கும் இவ்வளவு பேதமும் தூரமுமிருக்கிறது. ஆனால் பிளான் பார்த்த ஒருவன் பிளான் பார்க்காமலொருவன் ஆக இருவரும் ரெயிலேறி மெட்ராஸ் போகிறார்கள். சேலம் போனவுடன் இருவருமிறங்கி காப்பிஹோட்டலுக்கு போனவுடன்

முதல் மணி அடித்ததைக்கேட்டு பிளான் பார்த்த வன் இன்னுமிரண்டு மணி நேரமிருக்கிறது என்று தைரியமாய் காப்பி சாப்பிடுவான் பிளான் பார்க்காத வன் பயந்து ஓடி வருவான், ஆதலால் பிளான் பார்த்து போகிறது தைரியமிருக்கும். இதுபோல், சாஸ்திரம் பார்த்து ஒருவன் ஞானமடைகிறான். பார்க்காமல் ஒருவன் ஞானமடைகிறான் இருவருக் கும் வித்தியாசமிதுவே. பின், முதலில் ஒருவர் என் னிடம் ஞானிக்கு பிராரத்தமுண்டோ இல்லையோ வென்றார். இல்லை யென்றேன். அதனால் அவ ருக்கு சந்தேகந்தீரவில்லை. அதற்கு நன்றாக விளங் கும்படி திருஷ்டாந்தங் கூறுகிறேன். அதாவது:— மழை நன்றாகப் பெய்யும்போது இரண்டு மனி தர்கள் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒரு வன் பலமான குடை பிடித்துக்கொண்டு நடக்கிறான். ஒருவன் குடையின்றி நடக்கிறான். இரண்டுபேர்களுக்கும் மழை பெய்தேதீரும் ஆனால் குடையிருக்கிறவன்மீது மழை படுகிறதில்லை மழை குடையில் விழுந்து போகிறது குடையில்லாதவ

னுக்கு மேலே விழுகிறது. இதுபோல இரண்டு மனிதர்கள் உலக சுக துக்கமென்னும் மழையில் நடக்கிறார்கள். அதில் ஒருவன் சுவானுபவமென் னுங் குடை பிடித்துக்கொண்டு நடக்கிறான். ஆத லால் அவன்மீது பிராரத்த மழை விழுகிறதில்லை. ஆனதால் பிராரத்தமில்லையென்றே சொல்லவேண் டும். பார்ப்பவருக்கு மழை பெய்கிறதுபோலவே தோற்றும். ஆனால் அவன் மேலே படுகிறதில்லை. குடையுள்ளவன் ஞானி குடையில்லாதவன் அஞ் ஞானி. ஞானி பிராரத்தத்துக்கும், அஞ்ஞானி பிராரத்தத்துக்கும் பேதமிதுவாம். பின்னும் நாம் நம்மை எப்போதும் தாழ்ந்தவனாகவே நினைத்தல் கூடாது. உயர்ந்தவனாகவே நினைக்கவேண்டும். அதா வது: தூலசூக்ஷ்ம காரண சரீரங்களை நானென் றெண்ணாமல் ஆத்மாவே நாமென்றெண்ணவேண்டும். எல்லா மதங்களையும் ஒன்றாக நினைக்கவேண்டும். ஏனெனில் எல்லா மதங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் பாதைகளாம். சர்வ மதங்களையுஞ் சார மாக நினைக்கவேண்டும். எல்லா மதாசாரியர்களையும்

சமமாகப் பார்த்தல்வேண்டும். ஒவ்வொரு மதங்களின் முடிவும் பிரஹ்மமென்றே நினைக்கவேண்டும். ஒரு மதத்திலும் துவேஷம் கூடாது. எப்போதும் எல்லா விஷயங்களிலும் எல்லாரிடத்திலும் சமாசமாகவே இருக்கவேண்டும். இதுவே என்னுடைய அபிப்பிராயம். நாம் எப்போதும் முயற்சியையே பெரிதாக நினைக்கவேண்டும். முயற்சியினாலேயே எல்லாமுண்டாகிறது. நாமே நம்முடைய முயற்சியிலேயே இந்திரனாகலாம், சந்திரனாகலாம், பிரமாவாகலாம், சிவனாகலாம், விஷ்ணுவாகலாம், மாயையாகலாம், பிரஹ்மமேயாகலாம். அதற்கு என்ன பிரமாணமென்றால் முன் நகுஷன் என்னும் ஓரரசன் முயற்சியினால் இந்திரனானான். ஹநுமாரும் முயற்சியினாலே பிரம பட்டத்துக்குள்ளானார். அதாவது ஓர் மனிதன் 100 அஸ்வமேதஞ் செய்தால் இந்திரனாகலாம். இந்திரன் 100 இராஜசூயயாகஞ் செய்தால் ருத்ரனாகலாம். ருத்ரன் 100 அஸ்வமேதஞ் செய்தால் பிரமாவாகலாம். பிரமா 100 நரமேதஞ் செய்தால் விஷ்ணுவாகலாம். சர்வ மனிதர்களும்

தங்கள் சங்கற்பநாசஞ்செய்தால் பிரஹ்மமாகலாம். ஆவதென்றால் புதிதாயுண்டாவதல்ல. இருந்த இருப்பை யதார்த்தசமாதியிலறிவதாம். புதிதாக உண்டாவது நிலைக்கிறதில்லை. நான் இப்போது சொன்னது ஓர் மதத்தை சேர்ந்ததல்ல, உபநிஷத் வாக்கியங்களாம். நாம் அடையவேண்டிய வழிகளை நம்முன்னவர்களான மஹரிஷிகளே ஏற்படுத்தியிருக்கின்றனர். அதைத் தற்கால நாகரீக மதஸ்தர்கள் ஏற்பட்டுக் கெடுதியான பாஷ்யம் பண்ணித் தாறுமாறாக நடக்கிறார்கள். ஆதலால் எனக்குச் சநாதனதர்மமே பிரியம். நாம் ஒரு மதத்தையுமனுஷ்டிக்கவேண்டாம். ஏனெனில் அக்கிரந்தங்களில் வாதமும் அந்நியமத கண்டனமுமாயிருப்பதால் அனுபவமான விஷயங்களை மாத்திரஞ் சொல்லக்கூடிய கிரந்தங்களைக் குருமுகமாக விசாரித்து நித்திய பரமானந்த மோக்ஷ சம்பிராஜ்யத்தை அடையக்கடவோம்.

இப்போது சாவகாசமில்லாததால் இன்னொரு தரம் வரும்போது நன்றாய் உங்களுடைய மனோபீஷ்டப்படி போதிக்கிறேன். இவ்வாறு இந்த உபந்யாசம் முடிந்தது.

ஓம். தத். ஸத்.

17552

